# கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

## அ.சா. 4 (LW 4 )

| **பெயர்** | **அங்காள பரமேஸ்வரி** | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/பெயர்** | ரத்தினகுமார் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **11.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு  10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2  எதிரிகள் ஆஜர்.   .

**முதல் விசாரணை**

நான் தற்போது கொடுமுடியில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்.  அ.சா.2.சாந்தி என் அம்மா ஆவார். அ.சா.3. பவுன்ராணி எங்கள் கடையில் வேலை பார்ப்பவர் ஆவார். கடந்த 06.05.2021 அன்று காலையில் கடை நடத்தி வியாபாரம் நடத்திவிட்டு மாலையில் கடையை அடைத்து விட்டோம். அப்போது மாலை 06.30மணி அளவில் ஒருவர் இட்லி இருக்கிறதா என கேட்டு வந்தார்.  கடையை அடைத்து விட்டோம் என சொன்னோம். போலிசார் மறுநாள் காலையில் வந்து இரவு யாரும் சண்டை போட்டுக் கொண்டார்களா என கேட்டார்கள். நாங்கள் உள்ளே இருந்தோம் என சொன்னோம். வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன்  கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 06.05.2021 அன்று போலிசார் விசாரணையில் எங்கள் கடையில் மாலை 07.00மணி அளவில் ஒருவர் வந்து இட்லி பார்சல் கட்டிக் கொடுக்குமாறு கேட்டார்கள் என்றால் ஒருவர்  கேட்டார், கடை மூடப்பட்டது என சொல்லி அனுப்பிவிட்டோம். ஆஜர் எதிரிகள் கடையும், எங்கள் கடையும் எதிர் எதிரே உள்ளது , எங்கள் கடையிலிருந்து பார்த்தால் அவர்கள் கடை தெரியும்.  எதிரிகள் நீண்ட நாட்களாக நடந்து வருகிறது என்றாலும் நாங்கள் தற்போது தான் கடை நடத்தி வருகிறோம் என்றாலும் அவர்கள் கடையை விட எங்கள் கடையில் அதிகமாக வியாபாரம் நடந்தது என்றால் சரிதான். அதனால் ஆஜர் எதிரிகள் எங்கள் கடை நன்றாக ஓடுகிறது என  சொல்லி அவ்வப்போது தகராறு நடப்பது உண்டா என்றால் சரிதான். 06.05.2021 அன்று எங்கள் கடையில் நன்றாக வியாபாரம் நடக்கிறது என எதிரிகள் எங்கள் கடையில் சண்டை போட்டதை

நான் நேரடியாக பார்த்தேன் என்றால் சரியல்ல. மறுநாள் காலையில் வந்து பார்த்த போது சேர், கடப்பா கல் உடைந்திருந்தை நான் பார்த்தேன். சம்பவம் நடந்த நாளன்று ஆஜர் எதிரிகள் இறந்து போன நபரை சுவற்றில் அடித்து காயப்படுத்தினார்கள் என்றாலும் அதை நானும் என் தாயாரும் கண்ணுற்ற சாட்சிகளாக பார்த்தோம் என்றால் சரியல்ல. நான் பார்க்கவில்லை. ஆஜர் எதிரிகள் மீது நிறைய வழக்குகள் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது, நான் எதிரிகள் மீது பயந்துதான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.11 19:03:47 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.